இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை – 600006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
New No. 6, College Road, Chennai–600 006
Phone: 044- 28271951

# வானிலை தகவல்

**நாள்: 22.05.2021** **நேரம்: 1300 மணி**

**வெப்பச்சலனம் காரணமாக**

**22.05.2021:** கன்னியாகுமரி மாவட்டத்தில் **ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும்,** **கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்கள், தேனி, திண்டுக்கல் நீலகிரி மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.**

**23.05.2021,** **கடலோர தமிழகம் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகள், தேனி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

**24.05.2021:** **மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்கள்,** கன்னியாகுமரி, **திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையும் நிலவும்.**

**25.05.2021:** கன்னியாகுமரி, **தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும்,** **மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலும் வறண்ட வானிலையும் நிலவும்.**

**26.05.2021:** **மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்கள்,** கன்னியாகுமரி, **திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையும் நிலவும்.**

**சென்னையை பொறுத்தவரை**

**அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.**

**அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.**

**கடந்த 24 மணி நேரத்தில் மழை அளவு (சென்டிமீட்டரில்):**

**பள்ளிப்பட்டு (திருவள்ளூர்) 9, வளவனூர் (விழுப்புரம்) 6, மஹாபலிபுரம் (செங்கல்பட்டு), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி), மணலூர்பேட்டை (கள்ளக்குறிச்சி) தலா 5, சித்தார் (கன்னியாகுமாரி), பூந்தமல்லி ( திருவள்ளூர்), கடலூர் (கடலூர்), சாத்தனூர் அணைக்கட்டு (திருவண்ணாமலை), கோத்தகிரி (நீலகிரி), காஞ்சிபுரம் (காஞ்சிபுரம்) தலா 4 வந்தவாசி (திருவண்ணாமலை), செம்பரபாக்கம் (திருவள்ளூர்), வடபுதுப்பட்டு (திருப்பத்தூர்), திருப்போரூர் ( செங்கல்பட்டு), உத்திரமேரூர் (காஞ்சிபுரம்), வேங்கூர் (கள்ளக்குறிச்சி), கலவை (ராணிப்பேட்டை) தலா 3.**

**அதிகபட்ச வெப்பநிலை முன்னறிவிப்பு 23.05.2021 முதல் 25.05.2021 வரை: மத்திய வங்கக் கடல் பகுதியில் புயல் உருவாவதன் காரணமாக தமிழக பகுதிகளில் தரைக்காற்று மேற்கு வட மேற்கு திசையிலிருந்து வீச வாய்ப்பிருப்பதால் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் வறண்ட வானிலையும். வட தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் வெப்பநிலை இரண்டிலிருந்து நான்கு டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும்.**

**மீனவர்களுக்கான எச்சரிக்கை :**

**22.05.2021,23.05.20212: தமிழக கடலோர பகுதி, தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45-55 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும் .**

**24.05.2021: தமிழகம் மற்றும் ஆந்திர கடலோரப் பகுதி, மன்னார்வளைகுடா தெற்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும், மத்திய வங்கக் கடல் பகுதியில் மணிக்கு 65 முதல் 75 கிலோமீட்டர் வேகத்தில் இடையிடையே 85 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.**

**25.05.2021: தமிழகம் மற்றும் ஆந்திர கடலோரப் பகுதி, மன்னார்வளைகுடா தெற்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும், மத்திய வங்கக் கடல் மற்றும் வடக்கு வங்க கடல் பகுதிகளில் மணிக்கு 65 முதல் 75 கிலோமீட்டர் வேகத்தில் இடையிடையே 85 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.**

**26.05.2021: தமிழகம் மற்றும் ஆந்திர கடலோரப் பகுதி, மன்னார்வளைகுடா தெற்கு வங்க கடல், மத்திய வங்கக் கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும், வடக்கு வங்க கடல், ஒடிஷா மற்றும் மேற்கு வங்க கடலோரப் பகுதிகளில் மணிக்கு 65 முதல் 75 கிலோமீட்டர் வேகத்தில் இடையிடையே 85 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.**

மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மேற்குறிப்பிட்ட தேதிகளில் செல்ல வேண்டாமென **அறிவுறுத்தப்படுகிறார்கள் .**

**குறிப்பு : தென் மேற்கு பருவமழை மேலும் தெற்கு வங்கக்கடல், மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சிறிது தொலைவு முன்னேறியும் மற்றும் அந்தமான் தீவுகளில் முழுமையாகவும் முன்னேறியுள்ளது..**

**மத்திய கிழக்கு வங்க கடல் பகுதியில் இன்று 22.05.2021 புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது நாளை 23 ஆம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 24 ஆம் தேதி புயலாக வலுவடைந்து வட மேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற்று வடக்கு ஒடிசா - பங்களாதேஷ் கரையை வரும் 26 ஆம் தேதி கடக்ககூடும்.**

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.

**முனைவர் நா. புவியரசன்**
**இயக்குனர்**
**சென்னை வானிலை ஆய்வு மையம்.**

சென்னை வானிலை மையம்

**01.03.2021 முதல் 22.05.2021 வரை பெய்த மழை அளவு**

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 48.2 | 86.6 | -44 |
| செங்கல்பட்டு | 44.8 | 50.1 | -11 |
| சென்னை | 47.6 | 50.5 | -6 |
| கோயம்புத்தூர் | 243.5 | 139.9 | 74 |
| கடலூர் | 46.4 | 70.8 | -35 |
| தர்மபுரி | 91.3 | 132.9 | -31 |
| திண்டுக்கல் | 144.4 | 150.1 | -4 |
| ஈரோடு | 136.6 | 119.7 | 14 |
| கள்ளக்குறிச்சி | 39.4 | 75.3 | -48 |
| காஞ்சிபுரம் | 53.8 | 63.6 | -15 |
| கன்னியாகுமரி | 409.6 | 234 | 75 |
| காரைக்கால் | 42.4 | 89.6 | -53 |
| கரூர் | 43.7 | 90.6 | -52 |
| கிருஷ்ணகிரி | 84.1 | 115.1 | -27 |
| மதுரை | 94.8 | 130.3 | -27 |
| நாகப்பட்டினம் | 51.2 | 90.3 | -43 |
| நாமக்கல் | 71.8 | 123 | -42 |
| நீலகிரி | 302.2 | 179.7 | 68 |
| பெரம்பலூர் | 60.3 | 73.3 | -18 |
| புதுச்சேரி | 19.6 | 89.2 | -78 |
| புதுக்கோட்டை | 40.6 | 77.5 | -48 |
| ராமநாதபுரம் | 68.3 | 106.4 | -36 |
| ராணிப்பேட்டை | 84.1 | 66.4 | 27 |
| சேலம் | 85.6 | 132.6 | -35 |
| சிவகங்கை | 98.6 | 107.5 | -8 |
| தஞ்சாவூர் | 58.9 | 90.3 | -35 |
| தேனி | 198.5 | 155.1 | 28 |
| தென்காசி | 215.5 | 174.6 | 23 |
| திருநெல்வேலி | 119.6 | 127.6 | -6 |
| திருப்பத்தூர் | 83.5 | 90.3 | -8 |
| திருப்பூர் | 91.8 | 109.8 | -16 |
| திருவள்ளூர் | 58.6 | 56.5 | 4 |
| திருவண்ணாமலை | 48.4 | 84.9 | -43 |
| திருவாரூர் | 69.1 | 90.6 | -24 |
| தூத்துக்குடி | 79.8 | 110.2 | -28 |
| திருச்சிராப்பள்ளி | 60.4 | 80.6 | -25 |
| வேலூர் | 74.2 | 84.7 | -12 |
| விழுப்புரம் | 27.8 | 50.3 | -45 |
| விருதுநகர் | 145.8 | 135.8 | 7 |